16

# ஸூரா அல் அலக்

## (முதல் ஐந்து வசனங்கள்)

ஜாஹிலிய்ய சமூகம் அனாச்சாரங்களில் மூழ்கியிருந்தது. அவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெறுத்து வந்தார்கள். இந்நிலை மாற்றமடைய வேண்டும் என்ற சிந்தனையுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனிமையை நாடி ஹிராக் குகைக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திடீரென அங்கு தோன்றி, ''ஓதுவீராக!'' எனக் கூறினார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது எனப் பதிலளித்தார்கள். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கட்டியணைத்து ஓதுவீராக! எனக் கூறினார்கள். அப்போதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது எனப் பதிலளித்தார்கள். அவ்வாறு மூன்று தடவைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஸூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களையும் ஓதிக் காட்டினார்கள். இதுவே வஹியின் ஆரம்பமாகும்.

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾
اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ ﴿٣﴾ الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ الْإِنسَانَ
مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

1. (நபியே!) உமது ரப்பின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக! அவன் (எத்தகையவனெனில்) அனைத்தையும் படைத்தவன் ஆவான்.
2. மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து அவன் படைத்தான்.
3. (மேலும்) ஓதுவீராக! உம்முடைய ரப்பு மிகச் சங்கையானவன்.

4. அவன் எத்தகையவனென்றால், எழுது கோல் மூலம் (எழுதக்) கற்றுக் கொடுத்தான்.

5. மனிதனுக்கு அவன் அறியாதவற்றை எல்லாம் கற்றுக் கொடுத்தான்.

| பத விளக்கம் | அறபுப் பதம் |
|---|---|
| ஓதுவீராக, வாசிப்பீராக, படிப்பீராக, ஆராய்வீராக | اِقْرَاْ |
| உனது இறைவனின் பெயரால் | بِاسْمِ رَبِّكَ |
| மனிதனைப் படைத்தான் | خَلَقَ الْاِنْسَانَ |
| இரத்தக் கட்டி | عَلَقٍ |
| உமது இறைவன் சங்கையானவன் | وَرَبُّكَ الْاَكْرَمُ |
| எழுதுகோல் மூலம் கற்றுக் கொடுத்தான் | عَلَّمَ بِالْقَلَمِ |
| மனிதனுக்கு கற்றுக் கொடுத்தான் | عَلَّمَ الْاِنْسَانَ |
| அறியாததை | مَا لَمْ يَعْلَمْ |

அல்குர்ஆனின் முதலாவது அருளப்பட்ட வசனம் இரட்சகனின் (ரப்பின்) பெயரைக் கொண்டு ஓதுமாறு - கற்குமாறு பணிக்கின்றது. அகிலத்தோருக்கு வழிகாட்ட அல்லாஹ் தேர்ந்தெடுத்த தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடன் தொடர்பு படும் முதல் நிலையிலேயே அவனின் பெயரைக் கொண்டு ஓதும்படி கட்டளையிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் ''படைப்பாளன்'' எனும் பண்புப் பெயரை முதலில் பொதுவாகக் குறிப்பிட்டு பின்னர் மனிதனைப் படைத்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

மனிதன் ஆரம்பத்தில் தாயின் கர்ப்பப் பையில் அலக் என்ற நிலையில் ஒட்டிக் கொண்டிருந்தான். பின்னர் அல்லாஹ்வின் அருளால் அந்த அலக்

படிப்படியாக வளர்ந்து மனித உருவைப் பெறுகின்றது. இது அல்லாஹ்வின் சக்தியையும் அவனது அருளையுமே சுட்டிக்காட்டுகின்றது.

அடுத்த வசனம் எழுதுகோல் பற்றிப் பேசுகின்றது. அது மனித வாழ்க்கையில் கல்விக்கான ஆரம்பமாகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் உபகரணமாகவும் காணப்படுகின்றது. எனவே, எழுதுகோலைக் கொண்டு கற்பித்த அல்லாஹ் சங்கைக்குரியவன் என்றும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

அல்லாஹ் யாவும் அறிந்தவன். மனிதன் எதனையும் அறியாதிருந்த நிலையில் அவனே மனிதனுக்குத் தேவையானவற்றைக் கற்றுக் கொடுக்கிறான். மனிதன், மனித வாழ்வு, அண்ட சராசரங்கள் பற்றிய அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் மாத்திரமேயாவான். அவன் மூலமாகவே அனைத்தையும் மனிதன் கற்றுக் கொள்கின்றான் என்ற உண்மையை இந்த வசனம் முன்வைக்கின்றது.

கல்வி, அறிவு, பண்பாடு என்பவற்றின் உண்மையான பெறுமானத்தை விளங்கியிருக்காத ஜாஹிலிய்ய சமூகத்தை அறிவின்பாலும் பண்பாட்டு விழுமியங்களின் பக்கமும் ஆர்வமூட்டி சர்வதேச அரங்கில் பலமிக்கதும் முக்கியத்துவம் மிக்கதுமான சமூகமாக மாற்றுவதற்குரிய அடிப்படைகளைச் சுருக்கமாகவும் அழுத்தமாகவும் மேற்படி வசனங்கள் முன்வைத்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்குக் கல்வி அறிவு முக்கியமானதாகும். ஆகவே அறியாமை எனும் இருளில் மூழ்கியிருந்த ஜாஹிலிய்ய சமூகம் முன்னேற்றம் அடைவதற்கு அடித்தளமாக அமையும் வண்ணம் அல்லாஹுத்தஆலா அறிவின் முக்கியத்துவத்தை முதல் வஹியில் வலியுறுத்தியுள்ளான். அத்துடன் மனிதனின் தோற்றத்தின் பின்னால் உள்ள உண்மை நிலையையும் சுருக்கமாக விளக்கியுள்ளான்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அல் குர்ஆனின் முதல் ஐந்து வசனங்களும் இறக்கப்பட்ட சந்தர்ப்பத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
2. இவ் வசனங்கள் முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிராக் குகைக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டதற்கான காரணங்கள் இரண்டு தருக.
4. அல்லாஹ்வின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. பின்வரும் தமிழ்ப்பதங்களுக்கான அரபுப் பதங்களை எழுதுக.
    1. இரட்சகன்
    2. மனிதன்
    3. எழுதுகோல்
    4. கற்பித்தான்

## செயற்பாடு

ஸூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களையும் பொருளுடன் மனனமிடுக.